TVEC

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

**NVQ சுற்றறிக்கை இல. 06/2024**

அனைத்து தராதர அங்கீகாரம் பெற்ற பயிற்சி வழங்குநர்களுக்கு,

**தராதர அங்கீகாரம் பெற்ற பயிற்சிப் பாடநெறிகளில் (Accredited Courses) மாணவர் ஆட்சேர்ப்பு குறைவாக இருத்தல்**

NVQ பாடநெறிகள் தொழில்துறை திறன் தேவைகளை (Industry Skills Requirements) பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்படுவதால், தராதர அங்கீகாரம் பெற்ற பயிற்சி பாடநெறிகளில் மாணவர் ஆட்சேர்ப்பு குறைவாக உள்ளமையானது தொழிற்சந்தையை நோக்கிய "தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையில்" ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது.

2023 இல், நாட்டின் ஒட்டுமொத்த மாணவர் கொள்திறனில் (Overall Student Capacity) 58% பயன்படுத்தப்பட்டிருந்துடன், இத்தொகை 2025 இல் 70% ஆக அதிகரிக்கப்பட வேண்டும். ஆணைக்குழு தரவுகளின் பிரகாரம் 187 தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளின் Student Capacity 50% இற்கும் குறைவாகவே பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அப்பாடநெறிகளில் 60 பாடநெறிகளுக்கு 2023 ஆம் ஆண்டில் ஒரு மாணவர் கூட சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ள அந்தந்த தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கும், TVEC இன் அனுமதிக்கப்பட்ட Student Capacity ஐப் பயன்படுத்துவதற்கும் பயிற்சி வழங்குநர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பாடநெறிகளின் தராதர அங்கீகாரத்தின் அடுத்த புதுப்பித்தல் (Renewal of Course Accreditation) மற்றும் ஆணைக்குழுவின் எதிர்கால கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது மாணவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் செயல்திறன் மிக முக்கியமான அளவுகோல்களாக எடுக்கப்படும்..

இந்த சுற்றறிக்கை 01/05/2024 முதல் நடைமுறைக்கு வருகிறது.

**கலாநிதி.கே.ஏ. லலிததீர**
பணிப்பாளர் நாயகம்

Scanned with CamScanner